

மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக துறைமுகம் கிழக்கு பகுதி சார்பில் திராவிட உணர்வை சேர்த்து தைப்போம் ! செந்தமிழ் மகுடம் சூட்டி வைப்போம் ! எனும் தலைப்பில் அமைச்சர் பி.கே. சேகர் பாபு முன்னிலையில், வட்டக் கழகச் செயலாளர் ஆ.நா.பார்த்திபன் தலைமையில் நடைபெற்ற நலத்திட்டம் வழங்கும் விழாவில் கழக கல்வியாளர் அணி செயலாளர் திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன் திரைக் கலைஞர். சுகாசினி மணிரத்தினம் ஆகியோர் தயாளுஅம்மாள் பயிற்சி பள்ளியில் பயிற்சி பெற்ற 303 பெண்களுக்கு தையல் இயந்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் மேயர் பிரியா ராஜன், எஸ். இராஜசேகர் எஸ்.முரளி,கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, எம்.விஜயகுமார் ப.ஸ்ரீராமுலு எம்.சி ஜி.எம்.தேவன், NPM. சேக்அப்துல்லா, ராஜெஷ்ஜெயின் எம்.சி, டி.போஸ், இரா.கலைச்செல்வி, எம்.இப்ராஹிம்கனி, வெ.பரிமளம் எம்.சி., இசட்.ஆசாத் எம்.சி., நா.ரஞ்சித்விஜயாலயன், பி.விஜயகுமார், M.வினாயகம், பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், பா.ஜெகதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னாடிகள் செயல் வீரர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் வடக்கு பகுதி 102 (அ) வட்டத்தில் வட்ட கழக செயலாளர் எம்.ஜி.ரவிக்குமார் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன் தொகுதி மேம்பட்டு நிதியில் ரூ.33, லட்சத்தில் பல்நோக்கு கட்டடத்தினை சென்னை மேற்கு மாவட்ட கழக செயளாலர் நே.சிற்றரசு சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் அண்ணா நகர் வடக்கு பகுதி கழக செயலாளர் ச.பரமசிவம் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயளாலர் கார்த்திக் மோகன் மாமன்ற உறுப்பினர் ராணி ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்தனர். இதில் கழக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்

### ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# விவசாயத்துறை நன்கு வளர்ச்சி அடைந்துள்ளது!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் புள்ளி விவரங்களுடன் பதிலடி!

*சென்னை, பிப்.24-*

***சட்டப் பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பேசியபோது குறுக்கிட்டு விளக்கம் அளித்த வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், “திராவிட மாடல் ஆட்சியில் விவசாயத் துறை நன்கு வளர்ச்சி அடைந்துள்ளது “ என்பதை புள்ளி விவர ஆதாரங்களுடன் விளக்கினார்.***

அமைச்சர் இது தொடர்பாக குறிப்பிட்டதாவது :



வளர்ச்சி இல்லை, வளர்ச்சி இல்லை என்று சொல்கிறார்கள். அவர்களின் ஆட்சிக்காலத்தில் 2012-2013 ஆம் ஆண்டில், வேளாண் வளர்ச்சி 21.35 சதவிகிதமாக இருந்தது. Minusல். இருந்தது.

2015-2016ல் 4.85 சதவிகிதமாகவும், 2016-2017ல், 29.99 சதவிகிதமாகவும் இருந்தது. தி.மு.க. ஆட்சி வந்தபிறகு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சி வந்தபிறகு 2023-2024 ஆம் ஆண்டு 1.96 சதவிகிதமாகவும் குறைந்துள்ளது. இப்போது 1.96 ஆக குறைந்துள்ளது.

அதேபோல, 2024-2025 ஆம் ஆண்டு 1.83 ஆக, 29 எங்கு இருந்தது, 1 எங்கு இருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

வேளாண் வளர்ச்சியைப் பொறுத்தவரை, அது இயற்கை இடர்ப்பாடுகள், அதைத் தாக்குப்பிடித்து விவசாயம் செய்வதற்கு, முதலமைச்சர் அவர்கள், இந்த budget, நிதிநிலை அறிக்கை காரணமாக, இந்த அளவிற்கு குறைக்கப்பட்டு, இப்போது 3.3 என்ற விதமாக உயர்ந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்

### அயராது பாடுபட்டு கழகத் தலைவர் அவர்களை 2026 சட்டமன்றத் தேர்தலில்

# மீண்டும் முதலமைச்சராக அமர வைத்து அவரது பிறந்தநாள் பரிசாக சமர்ப்பிக்க வேண்டும்!

## மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சிறப்புரை!

*திருவள்ளூர் பிப்: 24:*

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் முன்னிலையில் கனகமா சத்திரம் ஏ.ஜெ.எஸ்.திருமண மண்டபத்தில் நடைபெற்றது ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் எம். ராஜேந்திரன் வரவேற்புரை ஆற்றினார்

இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ பல்வேறு ஆலோசனை வழங்கினர் அப்போது பேசிய அவர்

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழகம் தோறும் வெகு விமர்சியாக கொண்டாட வேண்டும்.

கழக தலைவர் முதல்வர் அவர்களின் அன்புக்கட்டளைக்கு இணங்க, திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள 2 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கி வாக்குச்சாவடிகளிலும் இன்று மறுநாள் 23 ஆம் தேதி முதல் உலக மகளிர் தினமான மார்ச் 8ஆம் தேதி வரை வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலினின் மகளிர் படையினர் வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசு செய்த அளப்பரிய சாதனைகளை விளக்கி பரப்புரை மேற்கொள்ள உள்ளனர்.

அதையொட்டி திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக வெல்லும் தமிழ் பெண்கள் வீடு வீடாக பரப்புரை ஒரு நாளைக்கு 15 முதல் 20 வீடுகளுக்கு பரப்புரை செய்ய வேண்டும். பரப்புரைக்கு செல்லும் முன்னர்அந்தந்த பூத் குழுவில் உள்ள10 மகளிர் குழுவினரும் தலைமைக் கழகம் தந்துள்ள பேட்ஜை கட்டாயம் அணிந்து செல்ல வேண்டும். தலைமைக் கழகம் தந்துள்ள டைரி மற்றும் வீடுகளில் ஒட்ட வேண்டிய ஸ்டிக்கர் உடன் எடுத்து செல்ல வேண்டும் என தெரிவித்தார்

வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகத்தினர்கள் தலைமைக் கழகத்தால் அறிவிக்கும் வேட்பாளரை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்திட இரவும் பகலும் பாராமல் பணியாற்றி கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மீண்டும் இரண்டாவது முறை முதலமைச்சராக



அமர வைக்க வேண்டும் 2026 சட்டமன்ற தேர்தல் வெற்றி தான் கழகத் தலைவர் அவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக சமர்ப்பிக்க வேண்டும்

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் மார்ச் 8 தேதி அன்று நடைபெறும் கழக மாநாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதியிலிருந்து பெருந்திரளாக மாநாட்டில் பங்கேற்க வேண்டும்

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1.31 கோடி மகளிர்களுக்கு வங்கிக்கணக்கில், பிப்ரவரி முதல் ஏப்ரல் வரையிலான முன்பணம் 3,000 மற்றும் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பு 2,000 என மொத்தம் 5,000 வரவு வைத்துள்ளார்கள் இந்த மகிழ்ச்சியான திட்டத்தை அறிவித்து செயல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக திமுக சார்பில் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறோம்

தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி, கழக பேச்சாளர் அரங்கநாதன், தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேஷன். டாக்டர் வி. சி.ஆர். குமரன், சி.ஜெயபாரதி, எம். மிதுன்சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு. எஸ். கே.ஆதாம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள் மேற்கண்ட கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் எஸ். மகாலிங்கம், மோ. ரமேஷ், க.அரிகிருஷ்ணன், சி.சு ரவிச்சந்திரன், தா. மோதிலால், பிரகாஷ் ஞான ஒளி, ஜி. ரவீந்தரா, சி.ஜே. சீனிவாசன், ஆர்த்தி ரவி, என். கிருஷ்ணன், சி.என். சண்முகம், பெ. பழனி, கே. ராஜேந்திரன், பி. டி. சந்திரன், டி.ஆர். கே பாபு, பா. சம்பத், மா. ரகு, ஏ.எல் விஜயகுமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சரஸ்வதி சந்திரசேகர், மாவட்ட மகளிர் தொண்டரணி அணி அமைப்பாளர் கோவிந்தம்மாள், மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### கறிக்கோழி வளர்ப்புத் தொழிலை

# ‘திராவிட மாடல்’ அரசு பாதுகாக்கும்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உறுதி!

*சென்னை, பிப்.24*

***சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பேசுகையில், கறிக்கோழி வளர்ப்புத் தொழிலில் நிலவும் பிரச்சனை குறித்து குறிப்பிட்டார்.***

அப்போது குறுக்கிட்டு விளக்கம் அளித்த மீன்வளம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், “கறிக்கோழி வளர்ப்புத் தொழிலை திராவிட மாடல் அரசு பாதுகாக்கும்” என்று உறுதி அளித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டதாவது :

தமிழ்நாட்டில் கறிக் கோழி வளர்ப்புத் தொழிலில் சுமார் 20,000 கறிக் கோழி வளர்ப்பு விவசாயிகளும், சுமார் 60 ஒருங்கிணைப்பாளர்களும் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கிடையே ஒப்பந்தம் போடப்பட்டு, தொழில் நடைபெறுகிறது.

கறிக் கோழி வளர்க்கும் விவசாயிகள் கறிக்கோழி உற்பத்திச் செலவு உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வளர்ப்புத் தொகை 20 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று ஆணையிட்டதின் பேரில் விவசாயிகளின் கோரிக்கைகளைக் குறித்து ஆய்வு செய்ய கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆகியோர் அடங்கிய மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டது. குழு அமைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் மாவட்ட ஆட்சியர் தலைமையில் இக்குழு கறிக்கோழித் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரிடையேயும் ஆலோசனை மேற்கொண்டு, இத்தொழில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்ய விரிவான அறிக்கைகள் பெறப்பட்டன.

கோழி வளர்ப்பு விவசாயிகளின் பிரதானக் கோரிக்கையான வளர்ப்புத் தொழில் தற்போது 6.50 லிருந்து 20 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்பது தொடர்பாக வளர்ப்புத் தொகையாக செலவு ஒன்றுக்கு அதிகபட்சமாக 12 ரூபாய் 50 காசுகள் வரை பெறுகிறார்கள் எனத் தெரியவருகிறது.

ரூபாய் 6.50 என்பது வளர்ப்புத் தொகை அல்ல; அது ஒரு குறைந்தபட்ச ஆதரவுத் தொகையாக மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது.

112026 முதல் பண்ணையில் வளர்க்கப்படும் புதிய கோழித் தொகுப்புகளுக்கு கிலோவிற்கு கூடுதலாக ஒரு ரூபாய் வழங்கப்படுகிறது எனவும், கோடைகாலத்திற்கான ஊக்கத்தொகை மட்டும் கோழி இறைச்சியின் சந்தை விலை அதிகரிக்கும் போது ஊக்கத்தொகை வழங்கப்படும் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒருங்கிணைப்பாளர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இப்படியாக பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டு, இன்றைக்கு அமைதியாக நடைபெறுகின்ற அந்த கோழிப் பண்ணை, கோழிக் கறி வளர்ப்பவர்களுடைய அந்த நிலைகளைச் சரிசெய்கின்ற வகையிலே இன்றைக்கு இத்துறையின்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கான நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

அந்த உத்தரவை நிறைவேற்றுகின்ற வகையிலே இன்றைக்கு தீவனத் தரத்தின் எண்ணிக்கை, ஆய்வக வசதி அளித்தல், நோய் தடுப்புப் பணிகள், பண்ணைப் பராமரிப்புக்காக தொழில்நுட்ப ஆலோசனைகள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதுபோல, இலவச மின் திட்டம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதுபோல, அவர்கள் கோழிப்பண்ணையில் பயன்படுத்தும் தேங்காய் நார்கள் விலையை குறைப்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்ற வகையிலே கோரிக்கைகள் வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கைகள் எல்லாம் இன்றைக்கு அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதனைக் கொண்டு சென்று, அதையெல்லாம் பேசி தொழில் அமைதியாக நடைபெறுவதற்கான நடைமுறைகளை அரசு செய்யும் என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் இன்று

# ரூ.9.79 கோடி மதிப்பிலான திட்டம் !

# துணை முதல்வர் திறந்து வைக்கிறார்!

## கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*திருவொற்றியூர், பிப்.24-*

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் எனது கோரிக்கையை ஏற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்ட ரூ. 9.79 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளை இன்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார் என்று திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணைத் தலைவருமான கே.பி. சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெிவித்திருப்பதாவது:

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் முயற்சியில் ரூ. 4.04 கோடியில் கட்டப்பட்ட எண்ணூர் பேருந்து நிலையம், ரூ. 2.75 கோடியில் கட்டப்பட்ட கத்திவாக்கம் கலைஞர் நூலகம், ரூ. 3.00 கோடியில் கட்டப்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்

ஆகியவற்றை திறந்து வைக்க 24.02.2026 இன்று நாளை காலை 10.30 மணியளவில் திருவொற்றியூருக்கு வருகை தரும் துணை முதல்வர் அவர்கள் வருகை தர உள்ளார், எனவே கழக நிர்வாகிகள், தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கே.பி. சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.



குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக மற்றும் ப்ளூ டிராகன் ஸ்போர்ட்ஸ் கிளப் இணைந்து நடத்தும் கழகத் தலைவர் திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆடவர் பங்குபெறும் மாபெரும் இறகு போட்டி நடைபெற்றது. குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர், படப்பை ஆ.மனோகரன் வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பையை வழங்கி சிறப்பித்தார்.உடன் படப்பை ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கர்ணன், ஒன்றிய குழு உறுப்பினர் சங்கீதா வேலு, துணைத் தலைவர் ஏழுமலை வினோத் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பெண்கள் வெறும் பயனாளிகள் அல்ல, அவர்கள் இந்த மாநிலத்தின் பங்குதாரர்கள் என்பதை உணர்ந்து கொண்டு செயல்படும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெல்லும் தமிழ்ப் பெண்கள் என்ற புதியதோர் பரப்புரையை மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரத்திற்குட்பட்ட 32 வது வார்டு, பாகம் 5, கடப்பேரி அற்புதம் நகர் பகுதியில் 32 வது வட்டக் கழக செயலாளர் இ.கமலக்கண்ணன் முன்னிலையில் தாம்பரம் மாநகர துணைச் செயலாளர், மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் தொடங்கி வைத்தனர்.